**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2024–ம் ஆண்டு ஜூலை திங்கள் 2 ம் நாள் செவ்வாய் கிழமை
2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் ஆனித் திங்கள் 18 ம் நாள்

I.A.3/2024
IN
OS.No.90/2021

முருகேசன். ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

//எதிராக//

1. சக்கரபாணி,

2. முத்துலெட்சுமி. ... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மனுவானது கடந்த 20.06.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.இராஜராஜன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T.A. ஜெயராஜ், B.Sc., L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

## உத்தரவு

மனுதாருக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1. மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் 07.12.2021ம் தேதி எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாருக்கு மஞ்சள் காமாலை நோய் வந்து நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததால் வழக்கறிஞரை பார்த்து விபரம் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை. இதனால் மனுதாரர் தரப்பில் எதிரிவழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்று

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2024.07.02 13:39:37 +0530

ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தக்க உத்தரவிட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :**

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. அசல் வழக்கானது 2020ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக பல வாய்ப்புகள் வழங்கப்பட்டு, வாய்தா போடப்பட்டும் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை. இதனால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டது என்றும், அதனால் வழக்கறிஞரை சந்திக்க முடியவில்லை என்றும் மனுவில் கூறப்பட்ட காரணம் சரியான காரணம் அல்ல. ஏனெனில் மஞ்சள் காமாலை நோய் ஆண்டு கணக்கில் இருக்காது. அசல் வழக்கு விசாரணை தொடங்கப்பட்டு, வாதிகள் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**4. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

5. அசல் வழக்கானது விளம்புகை, சுவாதீன மீட்பு மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு, நாட்டு மருத்து சாப்பிட்டு வந்ததால், வழக்கறிஞரை தந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக 07.12.2021ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் செயல் வேண்டும் மென்றே ஏற்பட்டதல்ல என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. அதற்கு மாறாக,

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.02 13:39:43 +0530

எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் வழங்கியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது வழக்கு விசாரணை தொடங்கப்பட்டபிறகு வழக்கு விசாரணையை காலம் கடத்தும் நோக்குடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது.

6. மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்ட காரணத்தினாலேயே உரிய நேரத்தில் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என மனுதாரர் தரப்பில் கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளுபடியே உள்ளது. மேலும், மஞ்சள் காமாலை நோய் பல ஆண்டுகளுக்கு தொடர்ந்து இருக்காது என்றும், அதனால் மனுதாரரின் மனுவில் உண்மைதன்மை இல்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியிருந்தாலும், ஒரு வழக்கில் இருதரப்பிற்கும் உரிய வாய்ப்பு வழங்கி இருதரப்பையும் கேட்டு முடிவு செய்தால் மட்டுமே அந்த வழக்கானது உண்மையான இறுதி நிலையை எட்டும். எனவே, இவ்வழக்கிலும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கும்விதமாக இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 2–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.02 13:39:50 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.02 13:39:53 +0530

சார்பு நீதிபதி,
கீரனூர்.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2024.07.02 13:39:57 +0530